## <u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.229/2016</u>** **தேதி.**06.07.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. சுகன்யா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. பி.வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு 06.07.2026ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.பஜலுல்லா காதிரி |
| வயது | 55/2026 |
| முகவரி | |

**சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.**

பி.வா.சா.1 வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

1. வாதிகள் எனக்கு எதிராகவும் என்னுடன் எனது சகோதர, சகோதரிகளுக்கு எதிராகவும் ஆற்காடு மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.18/2016 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தனர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கில் நான் அசல் வழக்கு எண்.14/2016 என்ற வழக்கில் நான் இடைக்கால உறுத்துக்கட்டளை கேட்டு ஒரு மனுவை தாக்கல் செய்தேன் என்றால் கேட்டிருப்பேன்.

2. அதே போல் வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கிலும் இடைக்கால உறுத்துக்கட்டளை கேட்டு ஒரு மனுவை தாக்கல் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இரண்டு மனுவும் விசாரிக்கப்பட்டு நான் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி

செய்யப்பட்டும், வாதிகள் தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிகள் எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான்.

3. அந்த வழக்கறிஞர் அறிவிப்பிலேயே தாவா சொத்து தங்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை. நான் அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். நான் எனது வழக்கறிஞருக்கு வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் கொடுக்க அறிவுருத்தினேனா என்றால் எனக்கு அறிவிப்பிற்கு வந்த விவரத்தை எனது வழக்கறிஞரிடம் சொல்லிவிட்டேன். அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்புபம்படி எனது வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை.

4. நான் என்னிடம் கேட்கப்படும் முக்கிய கேள்விகளுக்கு ஞாபகம் இல்லை என்றும் என் வழக்கறிஞருக்குத்தான் தெரியும் என்றும் இந்த வழக்கிற்காக வேண்டுமென்றே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் ஏற்கனவே எங்களுக்கிடையே இரண்டு வழக்குகள் நிலுவையில் இந்த அவதூறு வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது இவ்வழக்கின் வாதிகளின் ஆவணங்கள் குறித்து எந்த தீர்மானமும் வராதநிலையில் அவர்களின் ஆவணங்கள் போலி என்று தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த

போலி ஆவணம் என்று குறிப்பிடுவதற்கு என்னிடம் எந்த அடிப்படை ஆதாரமும் இல்லை என்றால் என்னிடம் உண்மை ஆவணம் உள்ளதால் அவ்வாறு குறிப்பிட்டேன்.

6. வாதிகளின் ஆவணத்தை வாங்கி பார்க்காமல் அந்த ஆவணம் குறித்து எந்த விளம்புகை பரிகாரம் வராதநிலையில்தான் வாதிகளின் ஆவணம் போலி ஆவணம் என்று தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுத்துள்ளேன் என்றால் உண்மை ஆவணம் என்னிடம் இருக்கும்பொழுது வாதிகளின் ஆவணம் உண்மையானதா என்று பார்க்கும் அவசியம் இல்லை.

7. வாதிகளின் ஆவணம் என்னது என்று எனக்கு தெரியாது. என்னிடம் உள்ளதாக நான் சொல்லும் உண்மையான ஆவணம் யார் பெயரில் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் உள்ளது. எனது தந்தை பெயர் முஷ்தாக் பீர் காதிரி. முஷ்தாக் பீர் காதிரி அவரிடமிருந்துதான் ஐயாக்கண்ணு என்பவர் 21.03.1953, 19.08.1954, 27.12.1958, 24.09.1952 ஆகிய பத்திரங்களின் மூலம் கிரையம் வாங்கியதாக வாதிகள் சொல்கிறார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

8. முஷ்தாக் பீர் காதிரி என்பவரிடமிருந்து மாணிக்க கவுண்டர் 24.09.1952 ல் கிரையம் பெற்றதாக கூறுகிறார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் ஆவணங்கள் பற்றி தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கிற்காக கொடுக்கப்பட்ட அறிவிப்பிலேயே அது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் அவர்கள் போட்டிருக்கலாம், எனக்கு தெரியாது.

9. உரிமை பிரச்சனை குறித்து உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது அதை தீர்மானித்தபின்புதான் இந்த

வழக்கை தீர்மானிக்க முடியும் என்று நான் இந்த வழக்கில் தடை உத்தரவு கேட்டு மனு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. மேற்சொன்ன கிரைய ஆவணங்களை இந்த வழக்கில் வாதிகள் தாக்கல் செய்தபிறகும் அதை நான் வாங்கி பரிசீலனை செய்தேனா என்றால் தேவையில்லாததால் செய்யவில்லை.

10. என்னிடம் உள்ளதாக சொல்லும் உண்மையான ஆவணங்களை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் நான் தாக்கல் செய்த உரிமையியல் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வாதிகள் கிரையம் பெற்ற ஆவணம் குறித்தும் அதற்கு முன்பு ஐயாக்கண்ணு கிரையம் பெற்ற ஆவணம் குறித்தும் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் நான் தவறான சொத்து விவரம் கொடுத்து அசல் வழக்கு எண்.14/2016 வழக்கை தாக்கல் செய்துவிட்டு வாதிகளுக்கு எதிராக அவதூறு பரப்பவேண்டும் என்ற நோக்கத்தில் போலியான விளம்பரம் கொடுத்துள்ளேன் என்றால் என்னிடம் உண்மையான ஆவணங்கள் இருந்ததால் வாதிகளின் ஆவணம் பொய்யான ஆவணம் என்பதாலும் அடுத்தவர்கள் ஏமாறக்கூடாது என்று நல்ல எண்ணத்தில் விளம்பரம் கொடுத்தேன்.

11. என்னிடம் உண்மையான ஆவணம் உள்ளது என்று நான் சொல்வதும் வாதிகளின் ஆவணஙகள் என்ன என்று தெரியாமலேயே அது போலியானது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. என்னிடம் உள்ள உண்மையான ஆவணங்கள் என்னென்ன என்பது குறித்து நான் எனது பதிலுரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் இந்த வழக்கில் சொல்லவில்லை.

12. வாதிகளை அவமானப்படுத்தும் எண்ணத்தில் நான் போலி விளம்பரம் கொடுத்ததால் வாதிகள் கோரியுள்ள நஷ்டயீட்டை நான் வழக்கு செலவுடன் தரவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

Taken down before me in open
court, read over / intarpreted is the
witness and Acknowleged by
him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.